மழைநீரை சேமிப்போம் ! பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 18.10.2019

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாசி மாதம் 29ஆம் நாள் **18.10.2019 வெள்ளிக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

இந்நகராட்சியில் கட்டிட வரைபடவரைவாளராக பதிவு செய்து உரிமம் வழங்கும்படி கோரி 5 நபர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 50977/2018/டிபி3, நாள். 07.03.2019ன்படி தகுதி உடையவர்களை பதிவு பெற்ற வரைபட வரைவாளர்களாக நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித அறிவுரையின்படி நகராட்சி Screening Committee கீழ்க்கண்ட 5 நபர்களையும் நகராட்சி கட்டிட வரைபட வரைவாளர்களாக நியமனம் செய்ய பரிந்துரை செய்துள்ளது. எனவே அன்னார்களுக்கு கட்டிட வரைபட வரைவாளர் உரிம ஆணைகள் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

1. திருமதி.என். மதுமிதா
2. திரு.எஸ். சரவணகுமார்
3. திரு.ர. சரத்குமார்
4. திரு.ப. செந்தில் வடிவேல்
5. திரு.க. பாலமுருகன்

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண். /2019/எப்1)

**தீர்மான எண். 1198 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட அல்லிநகரம் கிராமம் வார்டு-C, பிளாக்-26, T.S.No.30/1 மற்றும் 30/2B -ல் 4186.00 ச.மீ இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க கோரி

திரு.A.C.மணவாளன், த/பெ. சின்னமாயன் அவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்.

மனுதாரர் மனையிடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு உரிய வழிமுறையாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.2914/2019/மம3, நாள்.17.10.2019--ன்படி வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ(மம) எண்-46/2019 என எண்ணிடப்பட்டுள்ளது. மேற்படி வரைபடத்தின்படி குடியிருப்பு மனைப்பிரிவு பகுதியில் அமைந்துள்ள சாலைகள், பூங்கா இடம், உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம், மன்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆகியவற்றை தானப்பத்திரம் ஆவண எண்.6966/2019, நாள்.09.09.2019-ல் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார்கள். மேலும் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் தார் சாலை அமைத்து இருபுறங்களிலும் கழிவுநீர் வாய்க்கால் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மின்கம்பங்கள் அமைப்பதற்கு இந்நகராட்சியில் தொகை ரூ.72,000/- சலான் எண் 1/2950, நாள்.18.10.2019-ல் பணம் செலுத்தி அதன் ரசீது இணைத்துள்ளார்கள்.

எனவே அரசு விதிகளுக்கு உட்பட்டு அனைத்து பணிகளும் செய்து முடித்துள்ளதால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ள சாலைகள், பூங்கா இடம், உள்ளாட்சி பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரத்தினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களுக்கு அனுப்பும் பொருட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**. மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண். /2019/எப்1)

**தீர்மான எண். 1200 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 03:

தேனி - அல்லிநகரம் நகராட்ச கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் தரைதளம் செகண்டரி பிளாக் கடை எண்: 63 குத்தகை விடுவதற்கு 18-10-2019 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | T.ஹைதர் அலி,<br>பிஸ்மில்லா இல்லம்,<br>பங்களாமேடு, தேனி. | - | ரூ:7,900/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | அகமது சுல்பிக்கர் அலி,<br>த/ப. திவான் மைதீன்,<br>142 பிஸ்மில்லா இல்லம்,<br>பங்களாமேடு, தேனி. | - | ரூ:6,450/- |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மேற்கண்ட கடைக்கு திரு. T.ஹைதர் அலி என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ:7,900/- கோரியுள்ளார். ஏற்கனவே மேற்கண்ட கடைக்கு கூடுதலாக மாத வாடகை இருந்ததால் தொடர்ந்து செலுத்த இயலாமல் கடை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டள்ளது. மேலும் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. பேருந்து நியைலம் திறக்கப்பட்ட போது கடுமையான போட்டி காரணாக கூடுதல் வாடகைக்கு ஏலம் கோரப்பட்டது. தற்போது பேருந்து நிலையம் அருகாமையில் தனியார் இடங்களில் அதிகமான கடைகள் திறக்கப்பட்டதால் வியாபாலம் சரிவர இல்லாத நிலையில் கூடுதல் வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் கடை ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி நிதிநிலையினை கருத்தில்கொண்டு மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**<u>தீர்மான எண். 1201 அ) அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்ச கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் தரைதளம் செகண்டரி பிளாக் கடை எண்: 62 குத்தகை விடுவதற்கு 18-10-2019 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி** | **உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு)** | **உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு)** |
|---|---|---|---|
| 1 | அகமது சுல்பிக்கர் அலி,<br>த/ப. திவான் மைதீன்,<br>142 பிஸ்மில்லா இல்லம்,<br>பங்களாமேடு, தேனி. | - | ரூ:5,850/- |
| 2 | R.மாரிச்சாமி,<br>184/F5, சோலைமலை அய்யனார் கோவில் தெரு, தேனி. | - | ரூ:6,600/- |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மேற்கண்ட கடைக்கு திரு. R.மாரிச்சாமி என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ:6,600/- கோரியுள்ளார். ஏற்கனவே மேற்கண்ட கடைக்கு கூடுதலாக மாத வாடகை இருந்ததால் தொடர்ந்து செலுத்த இயலாமல் கடை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டள்ளது. மேலும் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. பேருந்து நியைலம் திறக்கப்பட்ட போது கடுமையான போட்டி காரணாக கூடுதல் வாடகைக்கு ஏலம் கோரப்பட்டது. தற்போது பேருந்து நிலையம் அருகாமையில் தனியார் இடங்களில் அதிகமான கடைகள் திறக்கப்பட்டதால் வியாபாலம் சரிவர இல்லாத நிலையில் கூடுதல் வாடகை செலுத்த

இயலாமல் நகராட்சி வசம் கடை ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி நிதிநிலையினை கருத்தில்கொண்டு மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**தீர்மான எண். 1202 அ) அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 05:

தேனி - அல்லிநகரம் நகராட்ச கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் தரைதளம் செகண்டரி பிளாக் கடை எண்: 61 குத்தகை விடுவதற்கு 18-10-2019 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | N.குணசேகரன்,<br>த/ப. நடராஜ் பிள்ளை,<br>6/9 காந்திஜி ரோடு,<br>மதுரை ரோடு,<br>தேனி. | - | ரூ:6,350/- |
| 2 | M.மகேஸ்வரி,<br>184/F5, சோலைமலை அய்யனார் கோவில் தெரு,<br>தேனி. | - | ரூ:6,900/- |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட கடைக்கு திருமதி. M.மகேஸ்வரி என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ:6,900/- கோரியுள்ளார். ஏற்கனவே மேற்கண்ட கடைக்கு கூடுதலாக மாத வாடகை இருந்ததால் தொடர்ந்து செலுத்த இயலாமல் கடை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டள்ளது. மேலும் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. பேருந்து நியைலம் திறக்கப்பட்ட போது கடுமையான போட்டி காரணாக கூடுதல் வாடகைக்கு ஏலம் கோரப்பட்டது. தற்போது பேருந்து நிலையம் அருகாமையில் தனியார் இடங்களில் அதிகமான கடைகள் திறக்கப்பட்டதால் வியாபாலம் சரிவர இல்லாத நிலையில் கூடுதல் வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் கடை ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி நிதிநிலையினை கருத்தில்கொண்டு மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**தீர்மான எண். 1203 அ) அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 06:

தேனி – அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் உள்ள கனரா வங்கி ATM 31-10-2019 உடன் ஒப்படைப்பு செய்திட அனுமதி வழங்கிட மேலாளர், கனரா வங்கி, தேனி – அல்லிநகரம் கிளை அவர்கள் கடிதம்

அளித்துள்ளார்.

அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு (வரிவதிப்பு எண்: 125/2014091) அக்டோபர் -2019 வரையிலான காலத்திற்கான வாடகை தொகையினை செலுத்திய **பின்னர்** ஒப்படைப்பு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**: அ) **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2459/2019/அ3)**

**<u>தீர்மான எண். 1203 அ) அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | மக்கள் குரல், மதுரை | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 113/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2019 நாள்: 02-10-2019. | எண்: MDUMAB 192000324 நாள்: 03-10-2019 | ரூ: 55,650/- |
| | | **மொத்தம்** | | **ரூ: 55,650/-** |

மேற்கண்ட தொகை ரூ:55,650/- (ரூபாய்: ஐம்பத்து ஐந்து ஆயிரத்து ஆறுநூற்று ஐம்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.61/2019/அ3)**

**<u>தீர்மான எண். 1204 அ) மற்றும் ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

தேனி - அல்லிநரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தை ஸ்டால் **எண் : 14** (வரிவிதிப்பு எண் : 125/2005220) திரு.K.ராஜா சங்கர் என்பவர் பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.K.ராஜா சங்கர் மற்றும் திரு.K.R.கந்தபாண்டி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், கூட்டுத் தொழிலிருந்து திரு.K.ராஜா சங்கர் என்பவர் விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் உரிய கட்டணம் செலுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயற் மாற்றம் செய்திட கோரும் K.R.கந்தபாண்டி என்பவரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்:92 நாள்:03-07-2007-ன்படி சொந்தமான கிழக்கு சந்தை ஸ்டால் **எண் : 14** (வரிவிதிப்பு எண் : 125/2005220) திரு.K.ராஜா சங்கர் என்பவர் பெயரிலிருந்து K.R.கந்தபாண்டி என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2457/2019/அ3)**

**தீர்மான எண். 1205 அ. அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி